CHUNDIKULI BRANCH LIBRARY

Y.M.C.A

★ தென் மாகாணசபை உறுப்பினர் கடத்தல்; பின்னணியில் அரசு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 30 இதழ் 302
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-12-1993

(கொழும்பு)

தென்மாகாண சபையின் பொதுசன முன்னணியின் அங்கத்தவர் விமல் பிரசன்ன ஸிஸ்கூ என்பவர் கடத்தப்பட்டது அரசாங்கத்திலுள்ள சில முக்கியஸ்தர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்ததென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அங்கத்தவரின் மனைவி நந்தா விமல குணரட்ன என்பவர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட ஒரு கும்பல் இவரைக் கடத்தியுள்ளது என்பது அரசாங்கத்திலுள்ள சில

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் தமிழர் மீது மீண்டும் கெடுபிடிகள்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் மீதான கெடுபிடிகள் மீண்டும் அதிகரித்துள்ளன. அங்கு தங்கியுள்ளவர்களைப் பதிவு செய்யும்படி பொலிஸார் அறிவித்துள்ளனர்.

விடுதிகளில் தங்கியுள்ளவர்கள் பற்றிய தகவல்களை விடுதி உரிமையாளர்கள் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும் எனவும் இவர்கள் பற்றிய தகவல்களைத் தரத்தவறும் விடுதி உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்

(4-ம் பக்கம் பார்க்க

★ பூநகரித் தோல்வியை அடுத்து

சிறிமா - அஸ்கிரிய பீடாதிபதி

அரசியல் தீர்வுக்கு வலியுறுத்து!

(கொழும்பு)

பூநகரி தோல்வியை அடுத்து இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு எதிர்க் கட்சித்தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அஸ்கிரிய பீடாதிபதி சந்தானந்ததேரோவும் ஸ்ரீலங்கா அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இனப் பிரச்னை சம்பந்தமாக தற்போது எழுந்துள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை சமர்ப்பிக்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு பரிகாரம் காணக் கூடிய தீர்வுத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் அரசையும் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கேட்டுள்ளார். சமர்ப்பிக்கப்படும் தீர்வுத்திட்டம்

(4ம் பக்கம் பார்க்க)

அரசாங்கமே பிரச்னையைத் தீர்த்து வைக்கவேண்டும்

(கொழும்பு)

இனப் பிரச்னையை அரசாங்கமே தீர்த்துவைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்னை குறித்து அரசாங்கம் இதுவரையும் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லையெனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்தப்போரை அரசாங்கமே தொடக்கியது. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வாழ்கின்றார்கள். இந்தப்போரை

(4ம் பக்கம் பார்க்க

அரசியல் தீர்வு காண்பதே யுத்தத்தை நிறுத்த ஒரே வழி

அமைச்சர் தயாரத்ன

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்கு அரசியல் தீர்வு காண்பதே ஒரேவழி என்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் திரு. பி. தயாரத்ன தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி வருகிறோம். தொடர்ந்தும் அனுப்புவோம். வடக்கிற்கு உணவுப்பொருட்களை அனுப்ப வேண்டாம் என்று சிலர் கூறி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டதாக நான் அறியவில்லை. இரண்டு மாதங்களுக்குத்தேவையான உணவும் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வடக்கே அனுப்பி வைத்திருக்கிறோம் என்றும் அவர் மேலும் கூறினார். (ரி)

★ கூட்டுறவுச் சங்கங்கள் நேற்று நடத்திய

மறியலினால் சமூக சேவைப் பகுதி சில மணி நேரம் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் இயக்குனர்கள் பொதுமுகாமையாளர்கள் ஒன்றிணைந்து நடாத்திய மறியல் போராட்டத்தினால் யாழ். சமூக சேவை அலுவலகம் சில மணி நேரம் செயலிழந்திருந்தது.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு செலுத்தவேண்டிய 4 கோடி ரூபாவை உடன் செலுத்த வேண்டுமென்று கோரியே இந்த மறியல் போராட்டம் நேற்று சமூக சேவை அலுவலகம் முன்பாகவும் செயலக பிரதான வாயிலின் முன்பாகவும் நடைபெற்றது.

இதனால் சமூக சேவைப் பகுதி உத்தியோகத்தர்கள் தமது அலுவலகத்திற்குச்செல்ல முடியாது வெளியில் நின்றனர். ஆனால் செயலகத்தின் ஏனைய

(4ம் பக்கம் பார்க்க)

அரசுக்கும் - இராணுவத்திற்கும்

தொடர்பு குன்றியுள்ளதாம்

(கொழும்பு)

அரசியல் தலைமைப் பீடத்திற்கும் இராணுவத்திற்குமிடையே தொடர்பு குன்றிக் காணப்படுவதாகவும் இதற்கு பாதுகாப்புக்கென தனியான ராஜாங்க அமைச்சர் ஒருவர் இல்லாமையே மூலகாரணம் எனவும் இராணுவ ஆய்வாளர் தெரிவிப்பதாக 'ஐலண்ட்' செய்தியொன்று கூறுகிறது.

இதேவேளை முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்

(4ம் பக்கம் பார்க்க)

பூநகரித் தகர்ப்புக்கு சுவிஸில் முக்கியத்துவம்

(பேர்ண்)

பூநகரி இராணுவ முகாம் தகர்க்கப்பட்டமை குறித்து சுவிஸ் நாட்டுப் பத்திரிகைகள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டுள்ளன.

சுவிஸ் பத்திரிகையான 'பேவர்' தமிழீழ விடுதலைப் புலிகள் மெதுவாக ஆனால் பலமாக முன்னேறி வருகின்ற

(4-ம் பக்கம் பார்க்க)

★ ஜேர்மன் அமைச்சருக்கு

இனப் பிரச்னை குறித்து அரசுத் தரப்பு விளக்கம்

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ள ஜேர்மன் வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஹெல்மட் ஹாசிபர், வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக அமைச்சர் ஹமீத்துடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மன்-இலங்கை உறவுகள் குறித்து நீண்ட நேரம் உரையாடிய அவர் இனப்

(4ம் பக்கம் பார்க்க)

பத்திரிகைகள் மீது இராணுவத் தலைமை சீற்றம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன தெரிவித்த கருத்து தொடர்பாக செய்தி வெளியிட்ட கொழும்புபத்திரிகைகள் மீது இராணுவத்தலைமைப்பீடம் தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில்வைத்தியரத்ன தெரிவிக்காத கருத்தொன்றை

(4-ம் பக்கம் பார்க்க)

நித்திரையில் இருந்தவர் பலாலி ஷெல்லினால் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் மல்லாகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று நள்ளிரவு 12.45 மணியளவில் மல்லாகம் ஸ்ரேசனடிப் பகுதியில் பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்து வெடித்ததனால் வீட்டினுள் நித்திரையிலிருந்த ஒருவர் காயமடைந்

(4ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

COMPUTER கல்வி

Computer Basic Lotus 1-2-3 C.I M.A.I A.B. Shorthand & Typing புதிய பிரிவுகள் 18-12-93 சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன. உறுதியான கல்வியைப் பெற - School of Business Administration. 16, 3rd Cross Street, Jaffna. (C653)

பஷன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (pvt) Ltd, 14, Seenier Lane, Jaffna. (எ-3655)

மணமகள் தேவை

28 வயது உத்தரட்டாதி 4ம் செவ்வாய் சிவந்த அழகன் கனடிய அரசாங்கத்தில் வேலை பார்ப்பவருக்கு சிவந்த அழகிய A/L அல்லது பட்டதாரி மணமகள் தேவை. தம்பியும் தமையனும் மைத்துனரும் பொறியியலாளர்கள். இ. கனகசபாபதி, விதானையார் 22, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (சி 645)

வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைசாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், கைப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-626)

(O.L) MATHS

G. C. E. (O.L)க் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் தவணைப்பரீட்சைகளில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 19, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திர வீதி, சுண்டுக்குளி. சி 654

துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம் புதிய பஸ் நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (சி-648)

தேவை

குமுதினி பெண்கள் தையல் பயிற்சி நிலையத்திற்கு பயிற்சி பெற்ற ஆசிரியை உடன் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முடிவுத் திகதி 22-12-93 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: குமுதினி பெண்கள் தையல் பயிற்சி நிலையம், க. வீரசிங்கம், சாவற்கட்டு, ஆனைக்கோட்டை. (சி 655)

"மார்க்கோசின்-பூச்சிக்கொல்லி"

மார்க்கோசின் செய்திறன் கொண்ட சிறந்த பூச்சிக் கொல்லி. பயிரில் துரிதமாகப் பரவும் தன்மை நிறைந்தது. பூச்சிபுழுக்களின் விருத்தியைத் தடுக்கிறது. பூச்சிகள் எதிர்ப்புச்சக்தி விருத்தி செய்வதைக் கட்டுப்படுத்துகிறது. யாழ். மின்சார வீதி விவசாய இரசாயன விற்பனையாளர்கள் லங்கெம் லிமிட்டெட்டிலும் விற்பனையாகிறது. "மிக்கவைத்"

(எ-3653)

A/L ரௌதிகவியல் 94/95

தனிப்பட்ட முறையில் பிரத்தியேகமாக பௌதிகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம் ஏராளமான பயிற்சிகளோடு பல்லாண்டுகளாகக் கற்பித்து வரும் ஆசிரியரால் சிறப்பாக கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B Sc. (Cey) Dip-in-Ed 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-657)

சமூகமேம்பாட்டுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தினை முன்னிட்டு தமிழீழ மேம்பாட்டு நிறுவனத்தினரால் கோப்பாய் குடியேற்றத் திட்டப்பகுதியில் மாவீரர் வார ஆரம்ப நாளன்று சமூக மேம்பாட்டுத்திட்டமாக பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கோப்பாய் குடியேற்றத்திட்டப் பகுதியில் அமைந்துள்ள சுமார் 17 குடும்பங்களுக்கு இரட்டைச் சூட்டடுப்புகள் இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட்டதுடன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. இளையவனும் இக்குடும்பங்களுக்குப் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

---

8 ஆம் ஆண்டு நினைவு தினம்

பொன்னையா செல்வத்துரை

(பிரபல நொத்தாரிஸ் இலிகிதர்)

மலர்வு: 21 - 01 - 1907
உதிர்வு: 14 - 12 - 1985
திதி: 15 - 12 - 1993

"இளாக்கி ஐயா" என அழைக்கும் இனிய குரல் இன்னும் தொடர்கிறது"
ஆண்டுகள் எட்டுக் கடந்தாலும் உங்கள்
அன்பு நினைவு என்றும் எங்களைவிட்டகலா
தங்கள் வழியே எங்கள் வழி

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

இல. 1, நாகதேவன் துறைமுக வீதி,
வாடியடி, மட்டுவில்நாடு மேற்கு,
பூநகரி.

இல. 942, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி 656)

குண்டு வீச்சுக்கு கண்டனம்

பண்டத்தரிப்பு

தமிழ்பேசும் கிராமசேவை அலுவலர்கள் சங்கம் யாழ் அரசாங்க செயலகம் மீதுமேற்கொள்ளப்பட்ட விமான குண்டு வீச்சு சம்பவத்திற்கு பலத்த கண்டனம் தெரிவித்து மகஜர் ஒன்றை ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளது. - 72

விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வது தொடர்பாக விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 18-ம் திகதி சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. -வி

நுணாவிலில் பொதுச் சந்தை

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் வைரவர் கோயில் சந்திக்கு அருகில் இன்று காலை 9 மணிக்கு பொதுச் சந்தையொன்று திறந்து வைக்கப்படவுள்ளது. கைதடி, நுணாவில், மட்டுவில் விவசாயிகள் மற்றும் ரயர் தொழிற்சாலை இடம் பெயர்ந்தோர் முகாமிலுள்ள மக்களின் நன்மை கருதியும் இந்தப் பொதுச்சந்தை அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. -வி

உதைபந்தாட்ட மைதானம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தின் புனர் நிர்மாண நிதிக்காக, குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் இன்று 15-ம் திகதி முதல் நடாத்தவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். சென். பத்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்துக்கு போட்டிகள் யாவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மேற்படி கழகத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். -வி

நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிட ஏற்பாடு

(மானிப்பாய்)

யாழ். நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினர் மானிப்பாய் பட்டினசபை அலுவலகத்தில் வைத்து நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

இப்பிரதேசத்திலுள்ள சகல வர்த்தகர்களையும் எதிர்வரும் 17ம் திகதிவரை தமது நிறுவை அளவைகளுக்கு முத்திரையிட்டுச் செல்லுமாறு இத்திணைக்களப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (71)

இலவச வகுப்புகள்

(கொழும்புத்துறை)

தொல்புரம் பாபு கல்வி அறிவு வளர்ச்சிக் கழகம் தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவ அமைப்பினரால் தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இரவுநேர இலவச மீட்டல் வகுப்பும், மாலை நேர இலவசக்கல்வி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகிறது -154

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

வரவு- செலவுத் திட்டம்

1994

1994-ம் ஆண்டிற்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு-செலவுத் திட்டம் 1993 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம்) (252) (212) (1) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14-12-1993

(ஏ 3663)

அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீதசபைத் தேர்வுகள் - 1994

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பப்படிவங்களும், அறிவுறுத்தல்களும் 1993-12-15 புதன்கிழமை தொடக்கம், சபைப்பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத்தருகின்றேன் விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-

தி. பெரியதம்பி
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
(யாழ்ப்பாணம்-01)
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

(எ-3658)

உங்களுக்காக பணமும் பரிசில்களும்

ஜாம் பியர் கோடியல், நெல்லி புரூடி னேக்ஸ் ஆகியவற்றில் ஏதாவது 5 போத்தல்களை ஒப்படைத்து பணத்தைப் பெறுவதுடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள், மாத முடிவில் உங்களில் 40 பேருக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன.

பின்வரும் கடைகளில் போத்தல்களை ஒப்படைத்து அதிர்ஷ்டலாபச் சீட்டை பெற்றுக்கொள்ளுங்கள்:

1. ஸ்கந்தா மாஸ்ரர் - வட்டுக்கோட்டை. 2. கந்தசாமி அன் சன்ஸ் - சங்கானை. 3. லிங்கம் [illegible] - மானிப்பாய். 4. சபாரிஸ் சுண்டுக்குளி 5 பேப்பர் சொப் - இருபாலை. 6. சுபாஸ் பேக்கவுஸ் - நெல்லியடி. 7. பீடா சொப் - உடுப்பிட்டி, 8. செல்வராசா ஸ்ரோஸ் - பருத்தித்துறை. 9. மாருதி - வல்வெட்டித்துறை 10. அறிவகம் - சாவகச்சேரி. 11. வாசுகி ஸ்ரோஸ் - சுண்டுக்குளி. 12 நியூ வசந்தா - இன்னக்கடை. 13. லங்கா பதி - மல்லாகம். 14. தாஸ் ஸ்ரோஸ் - திருநெல்வேலி 15 விநாயகர் - கல்வியங்காடு. 16. ஜெயசக்தி பாமசி - மருதனார்மடம். 17. யாழ்றன் ஸ்ரோர்ஸ் - கொக்குவில். 18. சோதிநா புத்தகநிலையம் - இணுவில். 19. கபில் உணவகம் - பளை. 20. S. R. மகேந்திரன் ஸ்ரோஸ் கோண்டாவில். 21. அம்பிகை வர்த்தக நிலையம் - திருநெல்வேலி. 22. சிறிமேகா - சுன்னாகம், 23. பேரம்பலம் அன் சன்ஸ் - சுன்னாகம் 24. நிதினி ஸ்ரோஸ் - சுன்னாகம்.

★ ஒவ்வொரு மாத முடிவிலும் 40 பரிசில்கள் காத்துக் கொண்டு இருக்கின்றன.

★ பரிசு பெற்றோர் விபரம் தபால் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் அறிவிக்கப்படும்.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIER LANE, JAFFNA.

(ஏ-3662)

மணிவாக்கு

கடலில் துணிந்து கப்பல்கள் செல்லலாம் கரையருகே செல்வதே தோணிகளுக்கு நல்லது.

- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

நமது நோக்கு

மண்டேலா - நோபல் பரிசு!

1993ஆம் ஆண்டிற்கான சமாதான நோபல் பரிசை தென்னாபிரிக்க ஜனாதிபதி டி கிளேர்க்கும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் கூட்டாகப் பெற்றுக் கொண்டார்கள்.

வெள்ளையர் ஆட்சியிலே கறுப்பின மக்கள் பட்ட துன்பதுயரங்கள் கொஞ்ச நஞ்சமா?

அவர்களைக் கொடுங்கோன்மையிலிருந்து மீட்டிட மண்டேலா பட்ட துன்பங்கள், ஆற்றிய சேவைகள், நடத்திய போராட்டங்கள் அனுபவித்த நீண்ட சிறைவாசம் வரலாற்றிலே அழியா இடம் பெற்றுள்ளது.

இவரது பாட்டனார் திரான்ஸ்கேயின் மன்னராக இருந்தவர். ஆனால், நான்கு மனைவிகளையுடைய தகப்பனாரை இவர் தனது பத்தாவது வயதிலேயே இழந்தார். வறுமை வாட்டியது.

தந்தையின் ஆடைகளையே மாற்றித் தைத்து அணிந்து பாடசாலை சென்ற இவரைக் கேலி செய்தனர்; பொறுத்துக் கொண்டார். ஆடு, மாடு மேய்க்கும் பணியில் இருந்தார்; தங்கச் சுரங்கம் ஒன்றில் காவலாளியாகவே இருந்திருக்கிறார்.

அல்ஜீரியாவில் கெரில்லாப் பயிற்சி பெற்று நாடு திரும்பிக் கரந்துறைந்து வாழ்ந்தபோது, பொலிசாரினால் ஒருமுறை பிடிபட்டபோதும் தந்திரமாகத் தப்பிச் சென்றுவிட்டார் ஆனால் காரோட்டியாக மாறுவேடத்தில் சென்றபோது வகையாக மாட்டிக் கொண்டார், விளைவு? நீண்ட காலச் சிறைவாசம்!

அண்மையில் வெளிவந்த 'புரன்ட்லைன்' சஞ்சிகையில், கட்டுரையாளர் ஒருவரால் நோபல் பரிசுபெறுபவர்கள்பற்றி அலசப்பட்டிருக்கிறது.

மகாத்மாகாந்திக்கு வழங்கப்படாத நோபல் பரிசு, அமெரிக்க வெளியுறவுச் செயலாளராக இருந்த கிசிஞ்சருக்கு வழங்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது!

இன்று, மண்டேலாவுக்கும் பரிசு வழங்கப்பட்டதிலிருந்து நாம் அறியக் கூடியது என்ன?

அடக்கப்பட்ட இனங்களுக்காகப் போராடிய தலைவர்களைப் பயங்கரவாதிகள் என மேற்குலகம் ஒதுக்கித் தள்ளிய நிலை மாறிவிட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுபவர்களை, அமைதிக்காகப் போராடுபவர்கள் என்ற கணிப்புத் தலை தூக்கியுள்ளது.

கொடுங்கோன்மையின் பிரதிநிதியாக விளங்கிய டி கிளேர்க்குக்கும் பரிசு வழங்கியதேன்?

நீதிக்குப் பணிந்து, மனச்சாட்சியின்படி, நடந்து, பெருந்தன்மையோடு செயற்பட்டதற்காக அவர் கௌரவிக்கப்பட்டார். இதனைத் தென்னிலங்கை உணருமா?

இடம் பெயர்ந்த ஊழியர் தீவகப்பகுதி செல்வதற்கு ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு தீவகப்பகுதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றிய அனைத்து ஊழியர்களையும் மீண்டும் தங்கள் முன்னைய இடங்களுக்கு சென்று கடமையாற்றவேண்டும் என்ற சுற்று நிருபம் இராணுவநடவடிக்கையினால் தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் இதர பகுதியிலுள்ள பல்வேறு அரச வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் ஊழியர்களை மிகுந்த அதிர்ச்சியடைய செய்துள்ளது.

ஊர்காவற்றுறை, காரைநகர், புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றிய இடம்பெயர்ந்த ஊழியர்கள் இந்த சுற்றுநிருபம்பற்றி மேலிடத்துடன் தொடர்புகொண்டுள்ளனர்.

டாக்டர்கள், தாதியஉத்தியோகத்தர்கள், மருந்துக் கலவையாளர்கள், பரிசாரகர்கள், சாதாரண தொழிலாளர்கள் ஆகிய பல்வேறு தரங்களை சேர்ந்த தீவுப்பகுதியிலுள்ள அரச வைத்தியசாலைகளின் ஊழியர்கள் தீவகப் பகுதி நிலைமை பாதுகாப்பு அற்றதாக இருப்பதாகவும், பெரும்பாலான பொது மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், மிகவும் பதட்ட நிலை நீடித்துவரும் இக்கால கட்டத்தில் தாம் மீண்டும் அங்கு சென்று கடமையாற்ற அச்சமடைவதாகவும் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

தங்கள் ஆட்சேபகடிதங்களை யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஊடாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் இது பற்றி அறியப்படுகின்றது. -72

இராசி பலன்

15-12-1993
புதன்கிழமை
(தமிழுக்கு கார்த்திகை 30)

துதியை பி.ப. 1-32 வரை, பூராடம் மாலை 7-20 வரை, அமிர்தயோகம் இராகுகாலம் நண்பகல் 12-21 முதல் 1-51 வரை, சுபநேரம் மாலை 4-51 முதல் 6-21 வரை.

மேஷம்: பிறர் மனஸ்தாபம், தொழில் பகை, உடல் அசதி.

இடபம்: குடும்ப தகராறு, விதண்டாவாதம், மனசஞ்சலம்.

மிதுனம்: வித்தை விருத்தி, புத்திரர் பெருமை, தெய்வ தரிசனம்.

கடகம்: கடும்போக்கு, தொழில் லாபம், தற்பெருமை.

சிம்மம்: ஏமாற்றம், பெண் கவலை, மனக்குரோதம்.

கன்னி: அதிகாரிகள் கண்டிப்பு, அதிக யோசனை, வெறுப்பு.

துலாம்; வயோதிபர் அறிவுரை, பணவரவு, சென்ற இடத்தில் சிறப்பு.

விருச்சிகம்: மனப் பதட்டம், தொழில் பாதிப்பு, அலைச்சல்.

தனுசு: எதிர்பாராத உதவி மனக்களிப்பு, போட்டி தவிர்த்தல்.

மகரம்: தவறிழைத்தல், தனிமைப்படல், குடும்ப பிரிவு.

கும்பம்: சுபகாரிய செலவு, சகோதர உதவி, வாக்கு வன்மை.

மீனம்: புதிய ஸ்தானம், பயனுள்ள செயல் விருந்துபசாரம்.

—ஜோஸ்யர்.

வியட்னாம் போரில் காணாமல்போன —

அமெரிக்க படையினரின் எலும்புக்கூடுகள் கையளிப்பு!

(நியூயோர்க்)

அமெரிக்க - வியட்னாம் யுத்தத்தின்போது காணாமல் போனதாகக் கருதப்படும் அமெரிக்கப் படையினரின் எலும்புக்கூடுகள் அமெரிக்க அரசிடம் கையளிக்கப்பட்டன.

காணாமல்போன அமெரிக்கப் படையினர் விவகாரம் சம்பந்தமாக வியட்னாமிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்ற அமெரிக்க அமைச்சர் ஒருவரிடமே இவ்வாறு எலும்புக் கூடுகள் கையளிக்கப்பட்டனவாம்.

இவ்வெலும்புக் கூடுகள் பூரண இராணுவ மரியாதைகளுடன் விமான மூலம் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப் பட்டதாகவும் மேலும் அறிய வருகிறது. -அ

பிரிட்டிஷ் தலைவர்களுடன் ஜாசிர் அரபாத் பேச்சு

(லண்டன்)

விடுதலை இயக்க தலைவர் ஜாஸிர் அரபாத் அண்மையில் பிரிட்டனுக்கு பயணம்மேற்கொண்டு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் உட்பட பல பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேல்-பாலஸ்தீனிய ஒப்பந்தம் குறித்தும் ஜெரிக்கோ விவகாரம் பற்றியும் இவர் பிரிட்டிஷ் பிரதமருக்கு விரிவாக எடுத்துக்கூறியதாக தெரிவிக்கப்படுகிறது. -அ

மட்டக்களப்பில் மூன்று தமிழர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியில் முகாமிட்டுள்ள விசேட அதிரடிப்படையினர் கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஐந்துமணியளவில் பலாச்சோலை காக்காச்சிவெட்டை ஆகிய பகுதிகளை சுற்றி வளைத்து மூன்று அப்பாவி தமிழர்களை கைது செய்தனர்.

இளையதம்பி வர்மன் (வயது 19). பலாச்சோலையை சேர்ந்த காசிபதி பூபாலசிங்கம் (வயது 22), சிவகுமாரன் (வயது 21) ஆகியவர்களே விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் வெல்லாவெளி இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஏ)

அரசியல் சட்டத் தேர்தலில் யெல்சினுக்கு வெற்றி

(மாஸ்கோ)

ரஷ்யாவில் புதிய அரசியல் சட்டம் குறித்து, நடைபெற்ற தேர்தலில் அதிபர் பொறிஸ் யெல்சினுக்கு பெரும் வெற்றி கிடைத்துள்ளது.

அதிபர் யெல்சினின் புதிய சீர்திருத்த அரசியல் சட்டம் தொடர்பாக பொதுமக்களின் விருப்பம் அறியும் முகமாக நடைபெற்ற தேர்தலில் அதிபர் யெல்ஸினுக்கு பெரும் ஆதரவு கிடைத்துள்ளது.

பத்துக்கோடி மக்களிடையே நடாத்தப்பட்ட இத்தேர்தலில் புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்து 60 வீத மக்கள் வாக்களித்துள்ளதாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் ரஷ்யாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், அதிபர் யெல்ஸினுக்கு ஆதரவான கட்சிகள், குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறவில்லை.

இதுவரை வெளிவந்தநாடாளுமன்றத் தேர்தல்களின் முடிவுப்படி எல். டி. கட்சி 26 சதவீத வாக்குகளையும் கம்யூனிஸ்கட்சி 13 சதவீத வாக்குகளையும் அதிபர் ஜெல்சினின் ஆதரவான ரஷ்ய கட்சி 12சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

தேர்தல்களின் முழு முடிவுகளும் வெளிவர இன்னும் ஒரு வாரம் பிடிக்கும் என்றும், செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வீ-இ)

நிலம் அரித்து நீர் மூடும் - மூடாது
நலமறிந்து மரம் நடுமிடத்து

வீடுகளுக்குள் வெள்ளம் அகதிகள் பாதிப்பு

(ஆனைப்பந்தி)

அண்மையில் பெய்த பெரு மழையினால் நாவற்குழி லவிதா குடியிருப்பில் 80 வீதத்திற்கும் அதிகமான வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து விட்டது.

இதனால் இவற்றில் குடியிருக்கும் மக்கள் சமைப்பதற்கு வெள்ளம் புகாத உறவினர் வீடுகளையும், உறங்குவதற்கு அங்குள்ள பாடசாலை, படிப்பகம், தேவாலயம் ஆகியவற்றிற்கும் செல்வதாகத் தெரியவருகிறது. குடியிருப்பில் இருக்கும் எட்டுக் கடைகள் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளதினால் அவை இதுவரை திறக்கப்படவில்லை. (101)

---

750 அகதி சிறுவர்களுக்கு சீருடைகள் இல்லை

(வவுனியா)

வவுனியாவில் பத்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் சுமார் 750 அகதிச் சிறார்களுக்கு சீருடைகள் இல்லை. இதனால் இவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலையில் இருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

இவர்கள் தமிழ் நாட்டிலிருந்து திரும்பிய அகதிகள், வவுனியாவை அண்டிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தோர் ஆகியோருடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது. (154)

கரோல் நிகழ்ச்சி

(அரியாலை)

யாழ். ஆஸ்பத்திரி வீதி புனித அடைக்கல அன்னை ஆலய பங்கு இளைஞர்களால் நடாத்தப்படும் வருடாந்த கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. -59

சோளப் பயிர்ச் செய்கை ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1993/94 கால போகத்தில் சோளப்பயிர்ச் செய்கையை யாழ். மாவட்டத்தில் ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஒரு பரப்புக்கு மேற்பட்ட நிலத்தில் சோளப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குப் பயிரின் முக்கிய வளர்ச்சிக் காலத்தில் வரட்சி நிலவுமாயின் நீர்ப்பாசனம் செய்வதற்கு ஏதுவாக எரிபொருள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு உற்பத்திக் குழுப் பிரிவிலும் முன் மாதிரிப்பயிர்த் துண்டங்களில் சோளம் பயிரிடுவதற்கும் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதற்கும் சுமார் 210 கிலோ கிராம் சோளம் விதை இலவசமாக வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு வதிவிட வேளாண்மைப் போட்டியில் பங்குபற்றுபவர்களுக்குச் சோள விதை இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. யாழ் மாவட்டத்தில் சோளப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவரிடமிருந்தும் அவர்களால் விளைவிக்கப்படுகின்ற சோளம் முழுவதையும் அன்றைய சந்தை விலையின்படி கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

★ கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு

93ம் ஆண்டிற்கான அனுமதி

191 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திற்கு 93.ம் ஆண்டிற்கான அனுமதி 151 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 460 மாணவர்களை அனுமதிக்க பல்கலைக்கழகம் இணங்கிய போதும் சிறிலங்கா கல்வி அமைச்சு இதற்கு இணங்கவில்லை.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 191 மாணவர்களுக்கு மட்டுமே கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி உண்டு என அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு 40 மாணவர்களை அனுமதிக்கும் நிலையிருந்தும் 10 பேருக்குமட்டுமே அனுமதி வழங்க முடியுமென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தமிழ் மாணவர்கள் என்ற காரணத்தினாலேயே இந்தச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என கல்விமான்கள் குறைபட்டுக்கொண்டனர். (ரி)

தபால்களை சேர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தற்போது காங்கேசன் துறையில் நங்கூரமிட்டிருக்கும் ''வாதுவ'' கப்பலில் கடிதங்களை அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் கடிதங்களை அனுப்பும் பொதுமக்கள் எதிர்வரும் 17ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தங்கள் கடிதங்களை தங்கள் வதிவிடங்களுக்கு அண்மையில் உள்ள அஞ்சலகங்களிலோ அல்லது உப அஞ்சலகங்களிலோ அஞ்சல் பெட்டிகளிலோ சேர்க்குமாறு யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அதிபர் கேட்டுள்ளார். (ரி)

ஜப்பான்

ரூ. 4 கோடி உதவி

(கொழும்பு)

ஜப்பான் இலங்கைக்குக் கடன் நிவாரணமாக 4 கோடி 20 லட்சம் ரூபாவை வழங்க உள்ளது. ஜப்பான் 20வது வருடமாக இக்கடன் உதவியை வழங்குகிறது.

அரசாங்கம் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப்படும் பொருட்கள், சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நிதியைப் பயன்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. -ரி

மூன்றாம் தவணை பரீட்சை நாளை முதல் நடைபெறும்

(திருநெல்வேலி)

பாடசாலை மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை ஆண்டு 8, 9, 10க்கு நாளை வியாழக்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைகள் ஊரடங்கு விமான தாக்குதலினால் பிற்போடப்பட்டு நடைபெற்ற பின்னர் க. பொ. த. சாதாரண பரீட்சையினால் நடை பெறாமல் இருந்தது. நாளை முதல் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (157-ரி)

அரசுக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர் ரஞ்சன் விஜேரத்ன போன்ற ஒருவரே அப்பதவிக்கு அவசியம் தேவைப்படுவதாக இராணுவ பேச்சாளர் ஒருவரும் கருத்து தெரிவித்துள்ளார். -கே

★ கொமிஷன் பெறுபவர்களால்

தாக்குதல்களுக்கு ஒவ்வாத ஆயுதங்கள் கொள்வனவு

இராணுவ ஆய்வாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ராணுவத்திலுள்ள செல்வாக்கு மிக்கவர்கள் தற்போதைய தாக்குதல்களுக்கு ஒவ்வாத ஆயுதங்களை சில குறிப்பிட்ட கம்பனிகளிடமிருந்து பெற முயற்சிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுத கொள்வனவில் அவர்கள் பெறும் 'கமிஷனே' இத்தகைய தூண்டுதலுக்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அரசராணுவத்துக்கு தேவையான ஆயுதங்கள் தளபாடங்களை பெருமளவு கொள்வனவு செய்ய உத்தேசித்திருக்கும்போது, இத்தக் கொமிஷன் பெறும் செல்வாக்கு மிக்கவர்களின் நடவடிக்கையும் அதிகரித்துக் காணப்படுவதாக ராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (கே-ரி)

மாகோ கப்பலில் செல்ல 100 பயணிகளுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

கோமாரி கப்பலில் செல்ல இருந்து பின்னர் அனுமதி மறுக்கப்பட்ட 50 பயணிகளையும், மாகோ கப்பலில் திருகோணமலைக்கு அனுப்பிவைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வனுமதியைகொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இம்மாத இறுதியில் புறப்படவிருக்கும் மாகோ கப்பலில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட 50 பயணிகளுடன் சேர்த்துக் கோமாரியில் செல்ல அனுமதிமறுக்கப்பட்ட 50 பயணிகளுமாக 100 பயணிகள் திருகோணமலைக்குச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 156-ரி

42 லொறிகளில் மடு முகாமுக்கு உணவுப் பொருட்கள்

(கொழும்பு)

மன்னார் மடு அகதிமுகாமில் வசிப்போருக்கென அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் உலர்உணவுப்பொருட்களை ஏற்றிக்கொண்டு 42 லொறிகள் இன்று காலை அநுராதபுரத்திலிருந்து மன்னாருக்குப் புறப்படவுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது லொறிகளில் இவ்வுணவுப் பொருட்கள் ஏற்றப்பட்டு கொண்டிருப்பதாகவும் 270 தொன் மா, 50 தொன் சீனி, 84ஆயிரம்பெட்டிச் சவர்க்காரங்கள் மற்றும் பல பொருட்களும் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் மற்றுமொரு தொகுதி உணவுப்பொருட்கள் இம்மாதக்கடைசியில் அனுப்பப்படுமெனவும் மேற்படி லொறிகள் வவுனியா ஊடாக மன்னாரைச் சென்றடையும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. க-ரி)

ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கலைஞனும் படைப்பும் என்ற தொடரில் இன்று கைலாசபதி அரங்கில் நடைபெறவிருந்த அரங்கிசை நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆற்றலைத் தேடு! என்ற நிகழ்ச்சி நாளை 16-ம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

மலிவு விற்பனை

நத்தார் - புதுவருட பண்டிகை நாட்களை முன்னிட்டு
1-12-1993 முதல் 31-12-1993 வரை
எமது நிலையத்தில் சகல விதமான புடவை வகைகளையும், தைத்த ஆடை வகைகளையும்
மலிவு விலையில் விசேட கழிவுடன்
பெற்றுக் கொள்ளலாமென வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

லடன் புடவை நிலையம்
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-3620)

இன்று வாதுவ புறப்படாது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று கொழும்பு நோக்கிப் புறப்படுவதற்கிருந்த வாதுவ கப்பல் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று புறப்படவில்லையெனத் தெரியவருகிறது.

இக்கப்பல் புறப்படும் திகதி பின் அறிவிக்கப்படும் எனயாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் தெரிவித்தார். (162)

கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் எனவும் பொலிஸார் எச்சரிக்கை செய்துள்ளனர்.

விடுதிகளில் தங்கியிருப்பவர் பற்றிய விபரங்களைத் தராதவரும் விடுதி உரிமையாளர்களை இனங்கண்டுஅவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் முகமாக விசேட பொலிஸ்படை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இப்படையில் சிரேஷ்ட, கனிஷ்ட தரபொலிஸ் அதிகாரிகள் அங்கம் வகிப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கொழும்பில் மீண்டும் தமிழ் இளைஞர்கள் கைதாகும் நடவடிக்கை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ரி)

கூட்டுறவுச் சங்கங்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுகள் வழமைபோல் நடைபெற்றன.

அரச அதிபர் வரும்வரை மக்களின் பசி பொறுக்குமா? பாவனையாளர் பட்டினி, செயலகத்தில் 4 கோடி. கூட்டுறவுச்சங்க நிதியிலா சிறிலங்கா அரசின் ஆயுதக் கொள்வனவு? போன்ற சுலோகங்களை தாங்கியவாறு இதில் கலந்துகொண்டவர்கள் மறியல் செய்தனர்.

அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா சார்பில் ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் மறியல்போராட்டக்காரர்களை நேரில் சந்தித்து அவர்களது கோரிக்கைகளை ஏற்று கொழும்பு சென்றிருக்கும் யாழ். அரச அதிபர் திரும்பி வரும்வரை இம்மாதம் 30ந் திகதி மட்டும் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுக்கொண்டதற்கிணங்க 11 மணியளவில் இவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு சென்றனர். [71-158, 162-ரி[

தொழில் முன்னிலை பரீட்சை வினாத்தாள்கள் வரவில்லை

(திருநெல்வேலி)

ஆண்டு 9 மாணவர்களுக்கான தொழில் முன்னிலைப் பாடங்கள் திட்டமிட்டு அறிவித்தபடி இன்று நடைபெற மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைத் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கென ஆண்டு 9க்கு இத் தொழில் முன்னிலைப் பாட பரீட்சைகள் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையை தொடர்ந்து இன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் வினாத்தாள் பொதிகள் வந்து சேராததால் இப் பரீட்சை இன்று நடைபெற முடியாதுள்ளது பின்னர் வேறொரு திகதியில் இப்பரீட்சைகள் இடம்பெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-ரி)

ஹெர்மன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினை பற்றியும் உரையாடியதாகத் தெரியவருகிறது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசின் நிலைப்பாடு குறித்து, அமைச்சர் ஹமீத் திரு. ஹெர்மன் ஹாசர் அவருக்கு விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. -ரி

பூநகரித்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் எனச் சுட்டிக்காட்டி பூநகரித் தாக்குதலை தலைப்புச்செய்தியாக வெளியிட்டுள்ளது.

மற்றொரு பத்திரிகை பத்து வருடகாலத்தில் இடம்பெற்ற மிகப்பெரும் தாக்குதல் இதுவென வர்ணித்துள்ளது. (ரி)

பூநகரித் தோல்வியை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவானவையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

கொழும்பு நகரில் அண்மையில் நடைபெற்ற மனித உரிமைகள் தினக்கூட்டத்தில் கலந்து கொண்ட விதவைப் பெண்கள் போரை நிறுத்துமாறு கோரி பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்!

இதேபோன்று தென்பகுதியிலுள்ள பல்வேறு அமைப்புகளும் அரசை வலியுறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ரி)

பத்திரிகைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டு இப்பத்திரிகைகள் தவறான கருத்தொன்றை உருவாக்க முனைந்தன என்று இராணுவ தலைமைப்பீடம்தெரிவித்துள்ளது

இலங்கை இராணுவம் தோல்வி கண்டதென்று இராணுவதளபதி கூறியதாக வெளியான செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்று ராணுவதலைமையகம் அறிவித்துள்ளது.

விஷம நோக்கத்தோடு இவ்வாறான செய்திகள்வெளியிடப்பட்டனவென்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

அரசாங்கமே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் பயங்கரவாதப் பிரச்சினையாகக் காட்டுகின்றது இது பயங்கரவாதப் பிரச்சினையல்ல என்பதை நாம் தெளிவுபடுத்துகிறோம் என்றும் அவர் கூறினார். (ரி)

நித்திரையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இதே இடத்தைச் சேர்ந்த ஐ. பாலேந்திரன் (38 வயது) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி)

தென் மாகாணசபை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியஸ்தர்களுக்குத் தெரிந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 11ம் திகதி கல்கிசையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து எனது கணவர் இரகசியமானமுறையில் எனக்குக் காண்பிக்கப்பட்டார்.

அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவர் பாராளுமன்ற எம். பி. நிமால் பிரீஸ் என தான் அடையாளம் கண்டு கொண்டதாகவும். அவர் தமக்கு லஞ்சம்கொடுக்க முற்பட்டதாகவும் திருமதி நந்தா விமலகுணரத்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் தனது கணவரை அவர் ஜனாதிபதி முன் ஆஜர்செய்யப் போவதாகவும் என்னிடம் தெரிவித்தார் என்று திருமதி நந்தா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக திருமதி நந்தாவிமல குணரட்ண சத்தியக்கடதாசி ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார். (இ-ரி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 836/B: